1992 மார்ச் 26]

370—

துவாக்குடி கூட்டுறவு அச்சக நிர்வாகக் குழு

*1786—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அவசரச் சட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள, அனைத்துக் கூட்டுறவு இயக்கங்களின் நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்ட போதிலும், திருச்சி வட்டம், துவாக்குடியிலுள்ள கூட்டுறவு அச்சகத்தின் நிர்வாகக் குழு மட்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவசரச் சட்டம் மூலம் பிரதம கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே கலைக்கப்பட்டன. துவாக்குடியிலுள்ள திருச்சிராப்பள்ளி கூட்டுறவு அச்சுத் தொழிலியம் ஒரு மத்திய வகைச் சங்கமாதலால் நிர்வாகக் குழு தேர்தல் 1990 ஆம் ஆண்டு நடத்தப்படவில்லை. துவாக்குடியிலுள்ள திருச்சிராப்பள்ளி கூட்டுறவு அச்சக தொழிலியத்தினை நடத்துவதற்கு அரசு நியமனம் செய்த நிர்வாகக் குழுவால் மேற்படி அச்சகம் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழ்நாட்டில் திருச்சி வட்டம், துவாக்குடியிலுள்ள கூட்டுறவு அச்சகம் அவசரச் சட்டத்தின் கீழ் கலைக்கப்படவில்லை என்பதற்கு இது மத்திய கூட்டுறவுச் சங்கமாக உள்ளது என்றும், 1990ல் தேர்தல் நடத்தப்படவில்லை என்றும் பதில் அளித்துள்ளார்கள். அப்படி என்றால் மத்திய கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளில் நமது மாநில அரசின் பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி, விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் முடிவின்படி சட்டத் திருத்தம் கொண்டுவர இருக்கிறோம். அந்தச் சட்டத் திருத்தத்தில் இந்த மத்திய சங்கங்களும் சேர்த்து இணைக்கப்படும்,

அந்தச் சட்டத் திருத்தத்திற்குப் பின்னால் இந்தச் சங்கங்களுக்கும் சேர்த்து தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம் என்பதை உண்மையாக்கி, தேசியக் கொள்கையோடு இன்றைக்கு ஆட்சி புரியும் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள களைகளை அழித்து விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை இன்று செயல்முறைப்படுத்தி வரும் அரசியல் மே மாதம் நடைபெறும் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் இச்சங்கமும் சேருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற தேர்தலில் இந்தச் சங்கமும் நிச்சயமாக சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 371 திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

371—

டான்சி தொழிலாளர்கள் பிரச்சினை.

* 7444 திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் டான்சி தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து தொழிலாளர்களுக்கு உதவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூரிலுள்ள டான்சி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வந்ததால் இந்நிறுவனத்தை மூட முடிவு செய்யப்பட்டது. எனவே அதில் பணிபுரியும் 52 தொழிலாளர்